# சர்வதேச அரசியலில் புதிய கோட்பாட்டின் எழுச்சி: ஒரு நோக்கு

கே.ரி. கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

*அதிகாரம் என்ற எண்ணக்கரு அரசியல் விஞ்ஞானத்தில் அரசுக்குரித்துடைய அம்சமாகும். அரசின் இறைமையின் வியாபகத்தன்மை அதன் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தடையின்றி பிரயோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தைக் குறிப்பதாகும். அவ்வகை அரசின் அதிகாரம் எல்லை கடந்து பிராந்திய மட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்ற தன்மை பிராந்திய வல்லரசு அந்தஸ்தையும் சர்வதேசத்தில் அங்கீகரிக்கின்ற சூழலில் (Super Power) சர்வதேச வல்லரசு என்றும் அழைக்கப்படுகிறது. அடிப்படையில் அதிகாரமே மேலாண்மை செலுத்தும் அம்சமாகும். அரசியலில் அதிகாரம் என்ற எண்ணக்கரு அரசுகளின் நடைமுறை முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்தாலும் கோட்பாட்டு நோக்கில் புதிய பரிமாணமெடுத்து வருகிறது. அதிகாரம் அரசுகளிடமும் தாராண்மைவாத ஜனநாயக அரசுகளிடமும் சோஸலிஸ அரசுகளிடமும் பிரயோகத்தன்மையில் ஒரே அம்சமாகவே பிரதிபலிக்கின்றன. அதிகாரத்தின் பிரயோகம் அரசுகளைப் பொறுத்தவரை படைப்பல வல்லமை சார்ந்ததாகவே ஆய்வு செய்யப்படுகின்றது. இவற்றுடன் வளங்களும் தொழில்நுட்பத்திறன்களும் பாரியளவிலான ஆயுதத் தளபாடமும் ஓர் அரசின் அதிகாரத்தை அளவீடு செய்யும் காரணிகளாக விளங்குகின்றன. மக்கள் தொகை, அரசுகளின் அமைவிடம், பொருளாதார ரீதியிலான வளம், தொழில்நுட்பத்திறன், அரசியல் உறுதிப்பாடு என்பன இராணுவ வல்லமைக்கு மேலும் வலுவூட்டும் அம்சமாகும்.*

**திறவுச்சொற்கள் :**

**அறிமுகம்**

*1990*களுக்குப் பின்பு ஆரம்பிக்கப்பட்ட புதிய உலக ஒழுங்குகளுக்குள் மென் அதிகாரக் (Soft Power) கோட்பாட்டின் வடிவம் வெளிப்படைத் தன்மை கொண்டதாக மாறியது. அமெரிக்காவின் பிரபல்யமான ஹவாட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜோசப் நை என்பவர் இக் கோட்பாட்டின் மரபினைத் தோற்றுவித்தார். ஆனால் துரதிஷ்டம் அமெரிக்காவின் சூழல் முழுக்க முழுக்க வன்முறை சார்ந்த வன் அதிகாரத்தின் பிடிக்குள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் உலகளாவிய போக்கின் முதலீடு முழுமையாக வன் அதிகாரத் தளத்தினைக் (Hard Power) கொண்டது. இதனால் அவரது கோட்பாட்டின் எல்லை அமெரிக்காவின் மென்போக்கு அணுகுமுறைகளை வெளிப்படுத்தவும் வேண்டிய நிலைக்கு அவரது சிந்தனைகளை மட்டுப்படுத்தியிருந்தது.

ஜோசப் நைஇன் கோட்பாட்டின் முழுமையினை அமுலாக்க முடியாத அமெரிக்கா ஆட்சியாளர்கள் அதனைப் பலவீனப்படுத்தும் போக்கினை கையாண்டனர். ஆனால் முழு உலகத்தில் நை இன் சிந்தனை ஒரு வகை தனித்துவமான புரட்சி அலையை ஏற்படுத்தியது. ஆனால் உலகத்தில் பனிப்போர் முடிவை ரஷ்யா ஏற்றுக் கொண்ட பின்னர் காணப்பட்ட ஒற்றை மைய உலகம் *2001* இல் வன்முறை அதிகாரத்தின் தெறிப்புகளின் விளைவுகளை எதிர்கொண்டது. அதன் பின்னர் ஒற்றை மையம் தகர்ந்து போகும் நிலை ஆரம்பமானது. அக்காலத்தில் பல துருவ அரசியல் உருவெடுத்தது. ஆனாலும் உள்ளார்ந்த ரீதியில் மீளவும் இரு பிரதான அரசுகள் ஆதிக்க அரசுகளின் பட்டியலில் முதன்மை பெற்றன. அவை அமெரிக்காவும் சீனாவுமாகும். இதில் அமெரிக்கா பக்கம் இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் என்ற பெரும்முதலாளித்துவ ஜனநாயகக் கூட்டணி விளங்க சீனா பக்கம் ரஷ்யா, தென்னாபிரிக்கா, பிரேசில், ஈரான் போன்ற தனிக்கட்சி அல்லது முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான ஆரம்ப நிலையைக் கொண்ட அரசுகளின் கூட்டணி அணி வகுத்துள்ளன. இந்த உலக ஒழுங்கின்

முதலாவது கூட்டணியை முதன்மைப்படுத்தி உலகத்தின் இயங்குதிறன் காணப்படுகின்றது. அவை அமெரிக்காவின் அணுகுமுறையின் கீழ் அதிகாரத்தினைக் கைப்பற்ற போரை ஓர் உத்தியோகக் கடைப்பிடித்து வருகின்றன. போரின் விளைவுகளை பனிப்போர்க் காலத்தில் அனுபவித்த உலகம் அதிலிருந்து விடுபடுவதற்கான சூழலை வழங்கியிருந்தது. ஆனால் அமெரிக்க தலைமையிலான சக்திகள் இன்னோர் யுத்தத்துக்கே அதனைப் பயன்படுத்தியிருந்தன. ஒரே நாளில் மேற்குலக நாடுகளில் மட்டும் 60இலட்சம் மக்கள் ஈராக் யுத்தத்திற்கு எதிராக அணிதிரண்டனர்[3]. அமெரிக்கா யுத்தத்தை ரத்து செய்ய மறுத்தது. போரை நடாத்தி முடிக்க அமெரிக்கா உலகம் முழுவதும் மீள் எழுச்சிக்கு முனைந்தது. ஆனால் நிதி நெருக்கடியும் அதன் வன்முறை அதிகார அணுகுமுறையும் எழுச்சியை மட்டுப்படுத்தியது.

சீனா தலைமையிலான இரண்டாவது அணி மென்போக்கு அதிகாரத்தினை பெருமளவுக்கு கடைப்பிடித்துவரும்நாடுகளைஉள்ளடக்கியுள்ளன எனமுழுமையாகக்கூறிவிட முடியாது விட்டாலும் தனிக்கட்சி ஆட்சிமுறையைக் கொண்ட அரசுகள் என்ற அடிப்படையில் சீனாவின் அணுகுமுறை அவ்வகையான தந்திரத்தினைக் கொண்டுள்ளதாகவே உள்ளது. சீனாவின் முன்னாள் ஜனாதிபதி ஹூ ஜிண்டாவேவின் ஆட்சிக்காலம் மென்போக்கின் அடிப்படைக்குள் முழுமையாக சீனாவை நகர்த்தியதனைக் காண லாம். சீனாவை உலகத்தின் முன் நிறுத்துவதில் வெற்றிகண்ட ஆட்சியாளனாக ஜிண்டாவே விளங்குகின்றார். ரியானன்மென (1989) படுகொலையை அடுத்து வீழ்ச்சியுற்றிருந்த சீனாவின் அரசியல் அணுகுமுறையை புதிய திசைக்குள் இழுத்துவிட்டு நாகரீகமான உலக அரசியலை நிகழ்த்திக் காட்டியவர் ஜிண்டாவோ, அதுமட்டுமன்றி பொருளாதாரப் பாய்ச்சலிலும்,தொழில்நுட்ப வல்லமையிலும் மிக வேகமான வர்த்தக வளர்ச்சி யிலும் வெற்றி பெறச் செய்த ஜிண்டாவோ உலக நாடுகளுடன் சீனாவின் அணுகுமுறையில் மென்போக்கினைப்பிரயோகித்து வெற்றிகண்டார்.

**மென் அதிகாரம்** (Soft power)

அரசியல் விஞ்ஞானத்தில் இது ஒரு தந்திரோபாயக் கோட்பாடு. அறிவியல்விஞ்ஞானத்தில் ஒரு அரசு சார்பியல் கோட்பாடு, இது அரசுகள் ஒவ்வொன்றும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை உள்ளடக்கிய நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகும். ஜோசப் நைஇன் வார்த்தையில் கூறுவதாயின் மென் அதிகாரம் என்பது பிற சக்திகளுக்கு (நாடுகளை) முன்னுரிமை வழங்குவதற்கான வலுவுடைய உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு செயல்[4] என கூறிக்கொள்ளலாம். அதாவது அரசுகளின் நட்பு கலந்தநடத்தையால்பிறஅரசுகளைக்கவர்வதனைக் குறிப்பதாகும். அதிகாரம் என்பதை அடைவதற்கு ஆயுதத்தைப் பிரயோகிக்கும் நடைமுறைகளைக் கைவிட்டு பரஸ்பரம் நட்புறவாக பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப (Soft Skills) ஒத்துழைப்புக்களைப் பரிமாற்றுவதன் ஊடாக அதனை அடைதல் என விளங்கிக் கொள்ள முடியும். பொருளாதார ஒத்துழைப்புக்கள், சமாதானம் உரையாடலுக்கான அனுசரணை வழங்குதல் , பொருளாதார அடிப்படையில் வளங்களுக்கும் தொழில்நுட்ப உதவிகளுக்கும் வாய்ப்பளித்தல் என பல அம்சங்களில் சாதாரண அரசுகளை வலுவான அரசுகள்ஈர்த்துக்கொள்ளமுனைகின்றதையேமென் அதிகாரமென ஜோசப் நை குறிப்பிடுகின்றார்[5]. மேலும்இவ்வகை அதிகாரத்தை ஜனநாயகமரபைப் பின்பற்றுகின்ற அரசுகளிடையே அதிகமாகப் பின்பற்றும் நடைமுறையைக் காணமுடியுமென அவர் வாதிடுகின்றார்.

அரசொன்றின் அணுகுமுறையால் அந்த அரசுடன் நெருக்கமாக உறவைப் பேணுவதற்கான தூண்டுதலைக் கொடுத்து பரஸ்பரம் நட்புறவினை வளர்க்க முயல்வதைச் சுட்டுவதாகவுள்ளது. ஆச்சரியமான விழுமியங்களைக் கொண்டிருத்தல் ஏனையஅரசுகளுக்குமுன்மாதிரியாகசெயல்படுதல், ஏனைய அரசுகளின் விருப்புரிமைகளுக்கு முன்னுரிமைகொடுத்தல்என்றபண்புகளைவெளிப் படுத்துவது மூலமே உலகளாவிய அதிகாரத்தினைப் பெறமுடியுமென்பது மென் அதிகாரம் பற்றிய எண்ணக்கருவாக்கமாகும்.

கவர்ச்சிகரமான தலைமை, நாகரீகமான அரசியல்விழுமியங்களைக் கொண்ட அரசியல்சார் நிறுவனங்கள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றுடன் பிற அரசுகளின் அங்கீகரிக்கின்ற தலைமைகளின் பங்குபற்றல்கள் ஜனநாயக மரபுகளாக அமைவது மென் அதிகாரத்தின் வலிமையைக் காட்டுகின்றது. மக்களின் கருத்துக்களை அங்கீகரித்தல், அதற்கு அமைவான சூழலை ஏற்படுத்தல் என்பன மென் அதிகாரத்தின் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன. மென் அதிகாரத்தின் துணை மூலமாக பிற அரசுகளைக் கவரும் விதத்திலான அணுகுமுறை நோக்கப்படுகிறது. மக்களாலும் வலுவுடைய குழுக்களாலும் அரசு மீதான அபிப் பிராயத்தை அரசுகளின் ஈர்ப்புத்தன்மையால் உருவாக்கப்படுதல் முக்கியமான அம்சமாகப் பார்க்கப்படுகிறது. மேலும் ஒத்துழைப்புடைய அதிகாரம் அரசுகளின் போக்கினை நிர்ண யிக்கக் கூடியது. ஓர் அரசுடன் பிற அரசுகள் பகிர்ந்தளிக்கக் கூடிய அரசியல் பொருளாதார, கலாசார தெரிவுகளை முதன்மைப்படுத்தும் போது மென்அதிகாரம் வலுவடைகின்றது.[7] வல்லரசுகளுக்கு மட்டுமே உரிய அம்சமாக மென் அதிகாரம் கருதாது இதர அரசுகள் மேற்கொள்ளும் சிலநடவடிக்கைகளைமென்அதிகாரம்வரைபுக்குள் உட்படுத்த முடியுமென்பதை கோடிட்டுக் காட்ட நை முயல்கின்றார்.

நோர்வே அரசாங்கத்தின் மரபுரிமை சார் லூதெறன் மிஷனரி (lutheran missionary heritage) மூலமான சமாதான பேச்சுவார்த்தைகளை மோதல் சக்திகளுக்கிடையில் ஏற்படுத்த முயன்றுள்ளமை நோர்வேயின் மென் அதிகாரம் என்றே குறிப் பிடப்படுகின்றது. பிலிப்பைன்ஸ், பல்கன், கொலம்பியா, இலங்கை, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்கும் சமாதான முயற்சிக்கான அடையாளங்களை இனங்கண்டு மேற் கொண்டமை உலகளாவிய ரீதியில் நோர்வேயின் மென்அதிகாரம் அணுகு முறையாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறே ஈராக் யுத்தத்திற்குப் பிற்பாடு போலந்து அரசாங்கம் எல்லையில் படைகளை குறைத்துக் கொண்டமை ஈராக்கில் சட்ட ரீதியான ஆட்சிமுறையை ஆரம் பிக்க அமெரிக்கா, இந்தியா என்பன நடவடிக்கை மேற்கொண்டமை ஆப்கானிஸ்தான் போருக்குப் பின்பான அரசாங்கம் ஆயுதமா? உணவா? என்கின்ற திட்டத்துடன் வேகமாக நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக, பொலிவூட் சினிமாவையும் இசை நடன நிகழ்ச்சிகளையும் இதர கேளிக்கை விடயங்களையும் மேற்கொண்டமை மென் அதிகாரத்தின் அணுகுமுறைகளாகவே கருதப்படுகின்றது.

**மென் அதிகார மூலங்கள்**

மென் அதிகாரத்தின் மூலங்களை அடையாளம் காண முயற்சிக்கும் ஜோசப் நை, அவற்றை பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்

1. கலாசாரம்
2. அரசியல் விழுமியம்
3. வெளிநாட்டுக்கொள்கை

இவற்றை விரிவாக நோக்குவோம்

**கலாசாரம்**

கலாசாரம் அதிகார மூலக்கூறுகளில் மிகப் பிரதான விடயமாகும். இது சமூக நடத்தையின் மாதிரி எந்தப் பிரிவினரின் விழுமியங்கள் அறிவூட்டல்கள் பல்பரிமாணத்தளத்தில் பரவலாகின்றதோ அதுவே அதிகாரத்தினை நிர்ணயிக்கும் வலிமையுடையதாகின்றது[8]. கலாசாரம்ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணத்தினைக் கொண்டது. உலகளாவியது தேசிய எல்லைக் குட்பட்டது. சில வகை கலாசாரம் குறிப்பிட்ட குழுக்களுக்கு மட்டுமே உரியதாக அல்லது சமூகங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக அமையும். சில நாடுகளின் தனிப்பட்ட மனித நடத்தைகள் தனித்துவமான அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தக்கூடியது. கலாசாரம் நிலையானதோ அல்லது மாறாததோ அன்று இது எப்போதும் தன்னியல்புக்கு அமைவாக மாற்றமடைந்து கொண்டிருக்கும். மாறுபட்ட கலாசாரங்கள் மோதும் போது அல்லது ஒன்றோடு ஒன்று இணையும் போது புதிய கலாசார பரி மாணங்களை அவையவையின் தன்மைக்கேற்ப சிருஷ்டித்துக் கொள்கின்றன. ஆனால் இஸ்லாமிய கலாசாரம் மாறுதலை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற

போதும் மாற்றத்தை அதிகம் விரும்பும் மேற்குலக கலாசாரத்துடன் மோதலை எதிர் கொள்கின்றது ஆனாலும் இஸ்லாமிய கலாசாரத்தின் மாறுதல் தவிர்க்கமுடியாதொன்றாக வளர்ந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

கலாசாரம் மென் அதிகாரத்தின் மூலமாக அமைவதற்குரிய இரு பரிமாணங்கள் வலுவான பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது. முதலாவது மரபுகளை ஆதாரமாகக் கொண்ட இன , மத மொழி அடிப்படையிலான உறவுமுறையினைத் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக இஸ்லாமிய தொடர்ச்சி ஐரோப்பிய தொடர்ச்சி மொங்கோலிய தொடர்ச்சி, இந்துத்துவ தொடர்ச்சி (Islamic belt. European Belt. Mongolion Belt Hindu Belt) என மரபு சார்ந்த படர்க்கை தனித்துவமான கலாசார அடையாளங்களை உருவாக்குகின்றது. இதில் மேலும் மேற்குலக கலாசாரம் , கிழைத்தேசக் கலாசாரமெனக் கருதும் மரபும் காணப்படுகின்றது ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின்அமெரிக்காநாடுகளில் இந்தியா, சீனா, பிறேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் செல்வாக்கு மேற்குறித்த கிழைத்தேய கலாச்சார மரபினூடாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இரண்டாவது நவீன கலாசார மாதிரிகளை உள்வாங்கும் புதிய சந்ததியினரின் எழுச்சி மேற்குப் பாணியிலான நவீன நாகரிக அடையாளங்களை சேர்த்துக் கொள்வதன் வாயிலாக ஒரு புதிய உறவு அரசுகளுக்கிடையே நிகழ்கின்றது. இதில் அமெரிக்கா, சீனா , ஜப்பான் என்பன இளைய தலைமுறையினரைக் கவரும் அம்சங்களை அதிகம் கொண்டு செயல்படுகின்றன.[10] இதில் பிரபலமான கலாசாரம் உயர் கலாசாரம் (popular cultural and highculture) என்பன கவர்ச்சிகரமான அம்சங்களை வெளிப்படுத்தி நாடுகளையும் மக்களையும் ஈர்க்கின்றதைக் குறிப்பதாக அமைகின்றது. மைக்டொனாட் (mac Donald) நிறுவனத்தின் உற்பத்திகளைச் சார்ந்து நாடுகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் பலம் கலாசார காரணிக்குரியதாகும். அமெரிக்க நாட்டின் சின்னத்தை அடையாளமாகக் கொண்ட ஆடை , அலங்காரப்பொருட்கள் மற்றும் சீன நாட்டின் சின்னத்தை அடங்கிய உற்பத்திப் பொருட்கள், கொலிவூட், சினிமா மற்றும் பொப்பாடல்கள் (Hollywood movies pop music) என்பன வரலாறு காணாத மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் நாடுகளை வேகமாக இணைத்துவிடும் என்ற அவதானிப்பு வளர்ச்சியடைந்துள்ளது. பின் நவீனத்துவ மரபுக்குள் எழுச்சி பெற்ற அனைத்து தொழில்நுட்ப வளர்ச்சியும் நாடுகளை மிக இலகுவாக இணைக் கும் கலாசாரத் திறனைக் கொண்டிருக்கின்றது. சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உற்பத்திப் பொருட்களே அதிக பிரபல்யமடைந்துள்ளன. இவை ஏற்படுத்தியிருக்கும் கலாசாரம் அந்த நாடுகளின் செல்வாக்கை பிற நாடுகளில் அதிகரிக்க வழியமைத்துள்ளது. மென் அதிகார எண்ணக்கருவின் வளர்ச்சியானது சுமுகமாக நாடுகளை ஒன்றிணைப்பதில் அதிகமான அக்கறை காட்டி வருகின்றது. கலாசாரம் வெகுவேகமாக நாடுகளினால் உள்வாங்கப்படுகின்றது. எந்த மக்களும் நவீன தொடர்பாடலினால் ஒன்றிணைக் கப்படும் போது அந்தந்த நாடுகளின் கலாசார செல்வாக்கு வளர்ச்சியடைகின்றது.

#### அரசியல் விழுமியம்

ஒரு நாடு உள்நாட்டு எல்லைக்குள் கொண்டி ருக்கும் அரசியல் ஆட்சி முறைமையின் இயல்பு பற்றிய அந்நாட்டு மக்களின் நடத்தை மற்றும் அவர்களின் மனோநிலையைக் குறிப்பதே அரசியல் விழுமியமாகும்[11] ஓர் அரசு பின்பற்றும் கொள்கைகளே அதன் நட்பு நாடுகளுக்கும், உறவு கொள்ளும் அரசுகளுக்கும் பரவலாக்க முயற்சிக்கும் அவ்வகைக் கொள்கை சார்ந்தே நாடுகளுக்கிடையிலான உறவு வளர்ச்சியடைவதைக் காணலாம். ஜனநாயக மரபுகளைப் பேணும் அரசுகளின் ஆட்சிமுறைமை உள்நாட்டில் சட்ட ஒழுங்கு முதன்மை அடைவதுடன் மக்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, மதிப்பளித்து தமது அபிப்பிராயங்களை அல்லது எண்ணங்களை வெளிப்படுத்தும் சூழலைக் கொண்டதாக அமையும் போது மக்களின் விருப்புக்குரியதாக ஆட்சி அமையும். அதனை பிற நாடுகளுடன்

பகிரும்போது அரசுகளுக்கிடையிலான நட்பு வளர்ச்சி அடையும். அதனையே மென் அதிகாரம் முதன்மைப்படுத்துகின்றது. அரசுகளின் உள்நாட்டு ஆட்சிமுறைகளின் இயல்புகளே பிற நாடுகளுக்கும் பரவலாக்கப்படும்.[12] இதில் வலிமையுடைய அரசுகள் கடைப்பிடிக்கும் மனித உரிமைப் பிரகடனங்கள், ஜனநாயக விழுமியங்கள், சட்டவாட்சித் தத்துவங்கள், பிற அரசுகளின் நட்புறவின் முதன்மையான விடயமாகும் சந்தர்ப்பம் அந்த நாடுகளின் மென் அதிகாரக் கட்டமைப்பினை வளர்ச்சியடையச் செய்கின்றது[13].

அரசாங்கங்கள் பின்பற்றுகின்ற கொள்கைகள் மென் அதிகாரத்தின் வலுவான மூலக்கூறாக அமையும் போது ஆட்சி முறைமையும் உறவு முறைமையும் அதிக மென் அதிகாரம் உடையதாகக் காணப்படும். இது பிரஜைகளின் நலன்களை முன்னிறுத்துவதுடன் மக்களின் அரசியல் விருப்புக்களை அமைதியான வழிமுறையினூடாக அடைவதற்கான அணுகுமுறை காணப்படும். அதனால் பிரஜைகளுக்கும் அரசுகளுக்குமான உறவுஒன்றில்ஒன்றுதங்கியிருப்பதற்கானபோக்கும் வளர்ச்சிடையும். இது இன்றைய வல்லரசுப் போட்டியில் ஓரம்சமாக நோக்கப்படுகின்றது. இதனைக் கடைப்பிடிக்கும் அரசுகள் உள்நாட்டில் பேணும் கொள்கைக்கு அதிகப்படியாக வெளி நாடுகளுடன் வெளிப்படைத்தன்மை அதிகம் கொண்டதாக பார்க்க முயலுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களாக அரசுகளுக்குள் நிலவிய உறவின் மனித உரிமை முதன்மையான அம்சமாக நோக்கப்படுகின்றது. சில அரசுகள் மீதான பொருளாதாரத் தடை மற்றும் வர்த்தகத் தடைகள் அமுலாக்கப்பட்டதுடன் சர்வதேச நிறுவனங்களும் கொடையாளி நாடுகளும் மனித உரிமையினைப் பேணாத நாடுகள் மீது தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்தமை குறிப்பிடதக்க அம்சமாகும். மென் அதிகாரத்தின் பிரதான மூலமான, அரசியல் விழுமியம் அரசுகளின் கொள்கைகளை பிரஜைகள் சார்ந்ததாக உருவாக்குவதில் கவனம் கொள்கிறது. இதனை கடைப்பிடிக்கும் நாடுகளின் உள்நாட்டு அரசியல் ஜனநாயக ஆட்சி மாற்றத்தைக் கொண்டிருப்பதுடன் அதனைக் கடைப்பிடிக்க பிரஜைகளுக்கு வழிசமைப்பதனூடாக ஆட்சி அதிகாரத்தை பலப்படுத்த முயல்கின்றது. இதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் அரசுகளின் உள்நாட்டு அரசியல்உறுதியடைவதுடன்சர்வதேசமட்டத்தில் அவ்வரசுகளின் இருப்பு நிலையானதாகவும் பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் அமையமும் அதன் இதர நிறுவனங்களும் நேரடியாக உதவுவதுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாப்புப் பெறும் நடவடிக்கையில் உதவுகின்றதைக் காண முடிகின்றது. இக் கொள்கையைப் பின்பற்றுவதில் ஐ.நா.சபை மட்டுமன்றி அமெரிக்காவும்அதன் கொள்கை வகுப்பாளர்களும் அரசியல் தலைமைகளும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.[14]

எனவே அரசியல் விழுமியம் பிரஜைகளின் அரசியல் பற்றிய எண்ணக்கருவாக அமைந்த போதும் அதன் வலிமை ஓர் அரசின் வல்லரசுப் போட்டியில் முதன்மை பெறச் செய்கின்றது. அரசாங்கங்கள் கொள்கைகளைச் சார்ந்து பிற அரசுகளின் உறவு பலப்படுத்தப்படும். அதற்கு பிரஜைகளின் அரசியல் பற்றிய அபிப்பிராயம் முக்கியமானது. பிரஜைகளுக்குள் நிலவும் உறவும், புரிந்துணர்வும் அரசுகளை ஒன்றிணைப்பதில் வலிமை செலுத்தும் வல்லமையுடையதாக அமையும்.

**வெளிநாட்டுக் கொள்கை**

மென் அதிகார மூலத்தில் முதன்மையுடையதாக வெளிநாட்டுக் கொள்ளை விளங்குகிறது. ஒரு நாடு பிறநாடுகளுடன்பின்பற்றும் உறவின்கொள்கையின் தன்மையைக் குறிப்பது எனக் கூறிக்கொள்ளலாம். ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்ளை அரசியல், பொருளாதார, இராணுவ, கலாசார கூறுகளின் நலன்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற போது பிற நாடுகளின் நலன்களுடன் இசைந்து முன்னெடுப்பதாக அமையக்கூடியது[15] அவ்வகை ஈர்ப்புத்தன்மைவெளிநாட்டுக்கொள்கையூடாகவே நிகழக்கூடியது பரஸ்பரம் அரசுகளுக்கிடையே விட்டுக்கொடுப்புக்கள், நெருக்கடிகால உதவிகள்,

பாரிய நன்கொடைகள் தவிர்க்க முடியாத ஒத்து ழைப்புக்களாக அமைவது அவசியமானது. பனிப்போர்க் காலத்தில் அமெரிக்காவும், சோவியத்யூனியனும் கடைப்பிடித்த மென் அதிகார வெளியுறவுக் கொள்கைகள் வன் அதிகார அணுகுமுறை சார்ந்ததாகவே காணப்பட்டது. ஆனால்ஒப்பீட்டடிப்படையில்சீனாமிகஅதிகமான மென் அதிகார வெளியுறவுக்கொள்கையில் சேர்த்துக் கொண்டுள்ளது.

வல்லரசு போட்டியிலுள்ள எல்லா சக்தி களும் ஏறக்குறைய பிற அரசுகளை ஈர்க்கும் விதத்திலேயே வெளியுறவுக் கொள்கைகளை மேற்கொள்வது மரபாகப் பின்பற்றுகின்றன. வெளியுறவுக் கொள்கையின் அறிவியலுக்குள் கோட்பாட்டாளர்முதன்மைப்படுத்தும்அம்சமாக சர்வதேச ஒழுக்கவியல் (International morality) பேணப்படுவதுடன் நியாயாதிக்கமுடைய சட்டங்களை அங்கீகரிக்கும் முறைமைகள் அரசுகளின் உள்நாட்டிலும் பிற நாடுகளிலும் கடைப்பிடிக்கும் தன்மை இருத்தல் வேண்டுமென வலியுறுத்துகின்றன. தன்னாதிக்கம், சுயநிர்ணயம், பாதுகாப்பு தனிமனித உரிமையை அங்கீகரித்தல், வெளிநாடுகளுக்குரிய பொறுப்பாண்மையை ஒப்படைத்தல் என பல்வேறுபட்ட அம்சங்கள் வெளியுறவுக் கொள்கை கொண்டிருத்தல் மென் அதிகாரத்தின் மூலக்கூறாகப் பார்க்கப்படுவதற்கு காரணமாகிறது.

எல்லா அரசுகளும் வெளியுறவுக் கொள்கைளை வரைவதில்லை என்ற விவாதம் சர்வதேச அரசியல் கோட்பாட்டாளர்களிடம் மேலோங்கியுள்ளது. வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் வகுக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு இசைவுபடும் அணுகுமுறையை மட்டுமே சிறிய நாடுகள் பின்பற்றுகிறன. இது பனிப்போர் காலத்தில் அதிகம் கடைப்பிடிக்கப்பட்டதை அவதானிக்க முடியும். ஆனால் ஏதோ ஒரு அடிப்படையில் தவித்துவமான வெளியுறவுக் கொள்கைளை பின்பற்ற சிறிய சாதாரண அரசுகள் முனைகின்றன. இதற்கு மென் அதிகாரத்தின் அணுகுமுறையே காரணம் என ஜோசப் நை கருதுகிறார்.[17] அரசுகளும் அரசுகளின் கொள்கைகளும் மாற்றமடைந்து விட்டன. உலகத்தைஈர்க்கும்கொள்கைகளுக்குமுக்கியத்துவம் கொடுக்கும் இயல்பு வளர்ச்சியடைந்துள்ளது. மாறாக இதனைத் தவிர்த்து அரசுகளின் சுயவிருப் புக்கு உட்பட்டு செயல்படுமாயின் அதன் விளைவுகள் மென் அதிகாரத்தை பாதிப்புக்கு உள்ளாக்கும் அடிப்படை அரசியல் நியமங்களை பலவீனப்படுத்தி நாடுகளுக்கிடையிலான நட்புறவினை சிதைக்கும் வழிமுறையாக அமை யும். அரசியல் தலைமைகளின் பிரபல்யம் வெளியுறவுக் கொள்கைகளை வகுத்து விடாது மாறாக அபிப்பிராயம் நிர்ணயமானதும் நியாய பூர்வமானதுமான கொள்கைகள், அங்கீகாரம் மிக்க அணுகுமுறைகள், வெளியுறவுக் கொள்கையின் போக்கினை வலிமைப்படுத்தும். இதனூடாக மென் அதிகார அணுகுமுறை வலுவடையும். இதுவே வெளியுறவுக் கொள்ளையின் பிரதான பங்கெடுப்பாக காணப்படுகின்றது.

சீன ஆய்வாளர்களில் முதன்மையானான மிங்லீ, ஜோசப் நை இன் வாதங்களில் முரண் பாடுடையவராகக் காணப்படுகின்றார். காரணம் உலகில் அமெரிக்க, சீன ஆய்வாளர்களே மென் அதிகாரத்தைத் தமது அரசுகள் பின்பற்றுகின்றன என்பதனை ஆதாரபூர்வமாக நிறுவ முயலு கின்றனர். சீனாவும் அமெரிக்காவுமே மென் போக்கு அதிகாரத்தினை அதிகம் கடைப்பிடிக்கும் அரசுகளாக உள்ளன. அதிலும் சீனாவே முன் னிலை பெறுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அமெரிக்காவின் போக்கில் கடந்த காலத்தில் பின்பற்றிய வன் அதிகார அணுகுமுறையையும் அதிலிருந்து வெளிவர முடியாத அரசாக காணப் படுவதனையும் வைத்து நோக்கும் போது ஜேர்மனிய ஆய்வாளரான யூசப் யேபி என்பவர் அமெரிக்காவின் மென்போக்கு அதிகாரம் என்பது பொருளாதார உதவிகளை விட இராணுவ உதவி களைத்தான் முதன்மைப்படுத்த முயலுகிறது என விவாதிக்கின்றார். அமெரிக்க மென் அதிகாரம் என்பது பேரரசுக்கான ஆட்சியை கைப்பற்றுவதையே நோக்காகக் கொண்டுள்ளது என அவர் மேலும் விபரிக்கின்றார். பேரரசை ஸ்தாபிக்காது அமெரிக்க சூரியன் அஸ்தமிக்காது

எனக் குறிப்பிடுகின்றார். வரலாற்று ஆய்வாளன் நிகால் புக்கூஷன் பண்பாடும். வர்த்தகப் பொருட்களும் மென் அதிகாரக் கோட்பாட்டின் மூலவேர்கள் எனவும், மென் அதிகாரம் ஒன்றும் மரபு சார்ந்த வலுவல்ல எனவும் அதனை உருவாக்கு வதும் பின்பற்றுவதும் மிகக் கடினமான அம்சம் எனக் குறிப்பிடுகின்றார்.

இன்னோர் சாரார் மென் அதிகாரக்கோட் பாட்டை மலினப்படுத்தும் வாதங்களை முன் வைக்கின்றனர். அமெரிக்காவுக்கு நிகராக உலகத்தை அமெரிக்க மயவாக்கத்துக்குரியதாக விவாதிக்கின்றனர். ஏறக்குறைய ஜோசப் நையும் அதனைத்தான் முன்வைத்தாலும் நியாயபூர்வமாக வாதிட முயலுகின்றார். அமெரிக்கா மென்போக்கு அதிகாரம் சார்ந்த அணுகுமுறையை அதிகம் பின்பற்ற வேண்டுமெனக் குறிப்பிடும் ஜோசப் நை அதனைப் பின்பற்றத் தவறும் அரசுகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் நிலைத்திருப்பது கடினமென கூறுகின்றார். இதனால் கடந்த காலத்தில் அமெரிக்கா பின்பற்றிய மென்நோக்கு உபாயங்களை முன்வைத்து விபரிக்கும் ஜோசப் நை, அதனை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்க ஆட்சியாளருக்கு வலிந்து கூறுகின்றார்.

**மென் அதிகாரத்தின் எல்லை**

கோட்பாடுகள் எவையும் வரையறைக்கு உட்பட்டவையல்ல. அதன்படி மென்அதிகாரத்தின் எல்லை மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட தொன்றா கவே உள்ளதெனக் கூறமுடியும். மட்டுப்பாடு டைய எல்லைக்குள்ளே அதிகார குறுக்கம் மென் அதிகாரம் என்ற எண்ணப்பாட்டையும் கட்டுப்படுத்துகிறது. நை குறிப்பிடுவது போல் மென் அதிகாரம் என்ற எண்ணக்கருத்தை கட்டளையூடாகவே கட்டுப்படுத்துவதன் மூலமாகவோ சுருக்கிக்கொள்ள முடியும். பிற நாடுகளை ஈர்ப்பதன் மூலம் அதிகாரத்தைத் தக்க வைக்க முடியுமென்பது கடினமானதாகவே புரியப்படுகிறது. இது அதிகாரத்தை பலப் படுத்துமென்பதையோ உருவாக்கும் என்பதையோ கணிப்பிட்டுக் கொள்ள முடிவது கடினமானது. அதனாலேயே மென் அதிகாரத்தின் எல்லை மட்டுப்பாடு சாத்தியப்படுகின்றது என்ற வாதம் ஆய்வாளரிடம் வளர்ந்துள்ளது. இதனையே ஆட்சியாளர்களும் பின்பற்ற விளைகின்றனர். அதிகாரத்திற்குரிய அணுகுமுறை கட்டளை பிறப்பித்தல். கட்டுப்படுத்துதல் என்ற வரைபுக் குள்ளால் கடந்த நூற்றாண்டு முழுவதும் வளர்ந்துள்ளது. இதனால் வன் அதிகார எண்ணப் பாட்டை உடைத்து விட்டு உலகிலுள்ள எல்லா அரசுகளும் மென் அதிகார எண்ணப்பாடு முற்றிலும் அங்கீகாரமற்ற கோட்பாடென வாதிடவும் முடியாது. பிற அரசுகளை ஈர்க்கும் சக்திகளைப் பின்பற்றிக் கொண்டு மக்களையும் அந் நாடுகளையும் திருப்திப்படுத்தி நட்புறவு வடிவத்தில் கோட்பாட்டை வளர்த்துச் செல்கின்றன.[19] ஆனால் அவற்றுக்கு வலுவான பின்புலமும் அரசியல் இராணுவ பொருளாதார பலமும் அவசியமாகின்றன. குறிப்பாக கடந்த காலத்தில் அவ்வகை அரசுகளின் இராணுவ பலம் மீளவும் அவற்றை வலுமிக்க சக்தகளாக மாற்றுவதில் வெற்றி காணுகின்றன. அதாவது நட்புறவுக்கு பதில் வன்முறை அதிதமான அணுகுமுறையாகக் காணப்படுகின்றது.

மென் அதிகாரம் எதிர்கொள்ளும் அடுத்த பிரதான சவால் இராணுவ ரீதியான அதிகாரத்தில் அரசுகள் கொண்டுள்ள கரிசனையாகும். இவை ஒரு வரலாற்றை தொடர்ச்சியான விஞ்ஞான பூர்வமாக வளர்ச்சிக்கட்டமாக ஏற்படுத்தி வருகின்றன. மேலும் தகவல் தொழில்நுட்பத்தின் பிரயோகத்தை அதிகமாக இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சியில் காட்டி வருவது குறிப்பிடத்தக்கதாகும்[20].

பயங்கரவாதம் மிகப் பிரதான சவாலான அம்சமாகக் காணப்படுகின்றது. மென் அதிகாரம் எதிர்நோக்கிய மிகப்பெரிய அபாயம் (9,11) செப்ரெம்பர் 11 தாக்குதலாகும். வரலாற்று ஆய்வாளன் வேல்டர் லாக்குவர் மரபார்ந்த பயங்கரவாதிகள் யாராயினும் அவர்கள் இடது சாரிகளாயினும், வலதுசாரிகளாயினும், தேசிய வாதிகளாயினும், பிரிவினைவாதிகளாயினும் அவர்களின் நோக்கம் பாரிய அழிப்பினை ஏற்படுத் துவதாகும் என்றார். இவர்களிடம் மென் போக்கு

அணுகுமுறை ஒருபோதும் காணமுடியாது. மென் அதிகாரத்தின் மிகப் பிரதான சவால் பயங்கர வாதம் என்பது தவிர்க்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனோடு இஸ்லாமிய தீவிரவாதம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அல்னைஹய்தா ஏறக்குறைய 60 நாடுகளுக்கு மேல் கிளைகளைக் கொண்டு இயங்கு வது சர்வதேச மட்டத்தில் இராணுவ ரீதியான சவாலாக மாறியுள்ளது. வல்லரசுகளின் அதிகாரப் போட்டி மென் அதிகாரத்தின் சவாலாகி விட்டது.

பிராந்திய அரசுகளையும் அரசுகளுக்கிடையிலான மோதலையும் தூண்டிவிடுவதுடன் தமது அரசியல் இலாபத்துக்காக அரசுகள் மீது இராணுவத் தாக்குதலைப் புரிவது அதிகரித்த நெருக்கடியாகியுள்ளது. அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் நடத்திய தாக்குதல் ஐக்கியநாடுகள் சபையின் அங்கிகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் அதன் உத்தியும், உபாயமும் அமெரிக்க இராணுவ நலனாகவே பார்க்கப்படுகின்றது. அமெரிக்க தாக்குதலை இஸ்லாமிய மக்கள் மௌனமாக நிராகரித்ததை தகவல்கள் வெளிப்படுத்தியிருந்தன. இது ஒரு வகையில் மென் அதிகாரக் கோட்பாடு குறிப்பிடுவது போல் மக்களின் அபிப்பிராயமாகவே பார்க்கப்படுதல் வேண்டும். இஸ்லாமிய மக்களின் அபிப்பிராயத்தை மட்டுமல்ல உலக மக்களின் அபிப்பிராயத்தையே அமெரிக்கா நிராகரித்து போரைப் பிரயோகித்தது.

**முடிவுரை**

சர்வதேச அரசியல் என்பது அதிகாரத்திற்கான அரசியலாகும். அதன் வடிவங்கள் மாறலாம். ஆனால் அரசுகளுக்கு அதிகாரம் என்ற இலக்கும் அடையப்படும் கோட்பாடாகவே விளங்குகிறது. இங்கு அரசு என்ற நிறுவனம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது. பொருள்சார் அரசுகளும், மென்போக்குடைய தொழில்நுட்பங்களுக்கான அரசுகளாகவும் காணப்படுகின்றன. இந்த வகை அரசுகளின் எண்ணிக்கையும் பலமும் அதிகரித்துள்ளது. அவற்றின் ஆயுளை நீடிக்கும் உள்கட்டுமானமும் தேசிய ஒருங்கிணைப்பும் தவிர்க்க முடியாத எழுச்சியை ஏற்படுத்தவுள்ளது. இத்தகைய தேசிய அரசுகளின் எழுச்சிகளுக்கு எதிராக தோற்றம் பெற்ற புரட்சிகள் அனைத்தும் தகர்ந்து போவதுடன் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் அதற்கான இழுபறி அதிகப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த நுற்றாண்டின் அரசியல் மென் அதிகாரம் என்ற தளத்தை நோக்கி விரிவடையவுள்ளது. இது ஒருவகையில் புதியது. இதனைப் பின்பற்றும் சக்திகள் ஆரோக்கியமான புதிய தளத்தை ஏற்படுத்தி அரசுகளை பொருள் சார் உலகத்தில் சமப்படுத்த முடியும். ஆனால் அதனை செய்யும் நிலையை அமெரிக்கா தலைமையிலான மேற்கு அரசுகள் அனுமதிக்குமா என்பதே முக்கிய கேள்வியாகும். இந்தக் கேள்வி மறுதலிப்பான பலவீனங்களின் கூட்டணி உலகத்தை உருவாக்க வாய்ப்புள்ளது. அதுவும் மீள ஒருங்கிணையும்போது அதிகாரம் பலமானதாக மாறும் நிலை தவிர்க்க முடியாததாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. Citied joseph S.Nye.(Jr) Power in a Global information Age.Routlede 2004.P.53
   Joseph Nye 1990 இல் Bound to lead The Changing Nature of American Power என்ற நூலின் மூலம் கோட்பாட்டினை உலகத்திற்கு தெரியப்படுத்தினார். இந்நூலில் Nye அமெரிக்காவின் soft power அணுகுமுறை பற்றிய வாதத்தினை முன்வைத்து விட்டு அமெரிக்காவின் அவ்வகை கொள்கையின் வரலாற்றைத் தெளிவுபடுத்தியிருந்தார்.
2. கேரி.கணேசலிங்கம். சமகால அரசியல், கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம், 2005, ஏப்ரல், பக் - 24
3. Bonnie.S.Glaser and Melissa E.Murphy, Soft Power with Chinese Characteristics, The on Going Debate. foreign Affairs march, April 2011. pp80 - 91

4. Mingjiang Li (Ed) soft power. China's Emegring in international politics, Lexington books, Rowman and littlefield publishers, Uk 2009.p.01
5. Joseph S.Nye (jr) Soft Power. The Means to Success In world Politics, public Affairs, NewYork , 2004.p.08
6. Ibid. p.06
7. Joseph S.Nye, The future of Power. New York, Public affairs, 2011, P.21
8. Ibid. P.21
9. Ibid. P.21
10. Joseph Nye, P.85
11. KT.Ganeshalingam, ThennasiyavinArasiyal Kalasaram (in Tamil) Chemamadu Poththakasalai. colombo. 2008, P.13
12. Joseph Nye The Future of Power .P.85
13. Joseph Nye "soft Power" P.13
14. Ibid Pp12 - 15
15. Joseph Nye P.11
16. Ibid.P . 11 - 15
17. Ibid. P.17
18. Ibid. P.15
19. Ibid. P.16
20. Ibid.P.21
21. Parama Sinha palit, and Amitendu pelit Strategic influence of Soft power inferences For india From Chinese Engagament of South And south Wast Asia, ICRICER, policy series NO - 03. August, 2011 .P.5